- தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ் -
தினத்தந்தி
DAILY THANTHI

வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 10-வது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (என்.ஏ.ஏ.சி.) செயல் தலைவர் வீரேந்திரசிங் சவுகானுக்கு, பல்கலைக்கழகத்தின் நிறுவனரும், வேந்தருமான ஐசரி கணேஷ் நினைவு பரிசு வழங்கிய காட்சி.

வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 10-வது ஆண்டு பட்டமளிப்பு விழா

தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் செயல் தலைவர் பங்கேற்பு

சென்னை, நவ.10-

வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 10-வது ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (என்.ஏ.ஏ.சி.) செயல் தலைவர் வீரேந்திரசிங் சவுகான் பங்கேற்றார்.

பட்டமளிப்பு விழா

சென்னை பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 10-வது ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவுக்கு பல்கலைக்கழகத்தின் நிறுவனரும், வேந்தருமான ஐசரி கணேஷ் தலைமை தாங்கினார். தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் (என்.ஏ.ஏ.சி.) செயல் தலைவர் வீரேந்திரசிங் சவுகான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ-மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

இதில் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) ஆ.ஜோதிமுருகன், வேல்ஸ் பல்கலைக்கழக குழுமத்தின் துணைத்தலைவர் ஆர்த்தி கணேஷ், பல்கலைக்கழக துணைத்தலைவர் பிரீத்தா கணேஷ், துணைவேந்தர் ஸ்ரீமன்நாராயணன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கொரோனா தொற்றை கருத்தில் கொண்டு அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றியபடி பட்டமளிப்பு விழா நடந்தது. பல்கலைக்கழகத்தில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களுக்கும், முனைவர் பட்டம் பெற்ற மாணவர்களுக்கும் சமூக இடைவெளியை பின்பற்றி சிறப்பு விருந்தினர் வீரேந்திரசிங் சவுகான் பட்டங்களை வழங்கினார். இணையவழி வாயிலாக 2 ஆயிரத்து 800 மாணவ-மாணவிகள் பட்டங்களை பெற்றனர்.

கொரோனா நாட்டை விட்டு செல்லும்

பட்டமளிப்பு விழாவில் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் செயல் தலைவர் வீரேந்திரசிங் சவுகான் பேசியதாவது:

கல்வி என்பது பட்டத்துக்கானது மட்டும் அல்ல. நாம் சார்ந்த சமுதாயத்தையும், நாட்டையும் உயர்த்தவும், வாழ்நாள் முழுவதும் நல்வழிகளை கடைப்பிடிக்கவும் பயன்படுத்த வேண்டும். அந்த வகையில் நம் நாடு கல்வியிலும் சிறந்து விளங்குகிறது.

இன்றைய கொடிய கொரோனா காலசூழ்நிலை இந்த உலகத்தைவிட்டே செல்வதற்கு தடுப்பு மருந்துகளை தயாரித்து ஏற்றுமதி செய்வதிலும் இந்தியாவின் சைரோஸ் பூனாவாலா நிறுவனம் உலகத்திலேயே முதல் இடத்தில் உள்ளது. இந்த உலகம் பல போர்களையும், பலநோய் காலநெருக்கடிகளையும் சமாளித்து விட்டு வந்து இருக்கிறது. எனவே இந்த கொரோனாவும் விரைவில் நாட்டை விட்டே செல்லும்.

இவ்வாறு அவர் பேசினார்.